# ஈஸியா செய்யுங்க... வீட்டை அழகாக்குங்க...

## டைல் எம்போசிங்



வாரந்தோறும் நாம பார்த்துக்கிட்டு வர்ற இந்த தொடரில் அடுத்து நாம கத்துக்கப் போற கலைவடிவம் 'டைல் எம்போசிங் வேலைப்பாடு.' இதை நமக்கு சொல்லிக் கொடுக்கப் போறவங்க பூமாதேவி.



**தேவையான பொருட்கள்:**

லைட் நிற டைல்ஸ்: தேவைக்கு

பெவிக்கால் அல்லது பேப்ரிக் க்ளூ: தேவைக்கு

பென்சில்: தேவைக்கு

கிளாஸ் கலர் சால்வண்ட்: தேவையான நிறங்களில்

ஸ்பாஞ்: தேவைக்கு

**செய்முறை:**

டைல்சை நன்கு துடைத்துக் கொண்டு, அதில் தேவையான வடிவத்தை பென்சிலால் வரைந்துக் கொள்ளவும்.

பின்னர் வரைந்து வைத்திருக்கும் வடிவத்தின் மேலேயே பெவிக்கால் அல்லது பேப்ரிக் க்ளூவை பயன்படுத்தி மிக மெல்லியதாக வரைந்துக் கொண்டு, பிறகு அதன் உட்புறத்திலும் பேப்ரிக்



க்ளூவை நிரப்பவும்.



இதை குறைந்தபட்சம் நான்கு மணி நேரம் நிழலில் காயவிடவும். அதன் பின்னர் கொடுக்கப்பட்டுள்ள கிளாஸ் கலர் சால்வண்ட்டை கொஞ்சமாக ஸ்பாஞ்சில் தொட்டுக் கொண்டு காய்ந்துள்ள பெவிக்கால் அல்லது பேப்ரிக் க்ளூவில் தடவிக் கொண்டே வரவும். பெவிக்காலால் வரைந்திருக்கும் இடங்களில் சால்வண்ட்டை கொஞ்சம் அதிகமாகவும், மற்ற இடங்களில் குறைவாகவும் ஒற்றி எடுக்கவும். இப்படி பெயிண்ட்டால் ஒற்றி எடுத்த பிறகு சிறிது நேரம் காயவிடவும். அதன்பிறகு பிரேமிட்டு மாட்டிவிடவும்.



**இதை செய்யும் போது கவனிக்க வேண்டியவை :**

- டைல்சை தேர்ந்தெடுக்கும் போது லைட் நிறத்திலும், டிசைன் இல்லாமலும் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் வரைந்த படம் நன்றாக கண்ணுக்குத் தெரியும்.
- பென்சிலின் மேல் பெவிக்கால் கொண்டு வரையும் போது இடைவெளி இல்லாமல் நிரப்பவும். அப்போதுதான் கலர் கொண்டு ஒற்றி எடுக்கும் போது அழகாக தெரியும்.



- கிளாஸ் கலர் சால்வண்ட்டை ஸ்பாஞ்சில் கொஞ்சமாக எடுத்துக் கொண்டு ஒற்றி எடுக்க வேண்டும். அப்போதுதான் பெவிக்கால் கொண்டு வரைந்த இடங்களில் அதிகமாகவும், மற்ற இடங்களில் குறைவாகவும் ஒட்டும். இன்னும் அதிகம் கலர் தேவையெனில் இரண்டு, மூன்று முறை கூட கிளாஸ் கலர் பயன்படுத்தலாம்.
- இம்முறையை பயன்படுத்தி கடவுள் படங்கள் வரையும் போது இன்னும் கூடுதல் அழகுடன் காணப்படும்.



-சங்கீதா..